TNVR090003222021

# உதவி அமர்வு நீதிமன்றம், விருதுநகர்.

முன்னிலை – திரு. P. பாலமுருகன், B.Com., B.L.,

உதவி அமர்வு நீதிபதி, விருதுநகர்.

2026–ம் ஆண்டு ஜூன் திங்கள் 11–ம் நாள் வியாழக்கிழமை

**அமர்வு வழக்கு எண்.103/2021**

<table>
<tr><td>1.</td><td>குற்றம் முறையிடுபவர்</td><td colspan="2">...</td><td colspan="2">அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>விருதுநகர் பஜார் காவல் நிலையம்,<br>குற்ற எண்.6/2013.</td></tr>
<tr><td rowspan="2">2.</td><td rowspan="2">குற்றம் சாட்டப்பட்டவர்கள்</td><td rowspan="2">...</td><td>1.</td><td colspan="2">முருகேஷ், (வயது 62/2026)<br>த.பெ. நாகூர் நாடார்,<br>75/3, வீராச்சாமி தெரு,<br>விருதுநகர்.</td></tr>
<tr><td>2.</td><td colspan="2">ரவிக்குமார், (இறப்பு)<br>த.பெ. நல்லதம்பி நாடார்,<br>266, சிவந்திபுரம், ஆத்துமேடு,<br>முத்துராமன்பட்டி, விருதுநகர்.</td></tr>
<tr><td>3.</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td colspan="2">...</td><td colspan="2">03.01.2013.</td></tr>
<tr><td>4.</td><td>புகார் கொடுக்கப்பட்ட நாள்</td><td colspan="2">...</td><td colspan="2">04.01.2013.</td></tr>
<tr><td>5.</td><td>குற்ற இறுதி அறிக்கை தாக்கல் நாள்</td><td colspan="2">...</td><td colspan="2">28.04.2018.</td></tr>
<tr><td rowspan="2">6.</td><td rowspan="2">1–ம் எதிரி</td><td colspan="2" rowspan="2">...</td><td>கைதான நாள்</td><td>பிணையில் சென்ற நாள்</td></tr>
<tr><td>05.01.2013</td><td>09.01.2013</td></tr>
<tr><td>7.</td><td>முதல்நிலை விசாரணை பதிவேட்டு வழக்கு எண் கமிட்டல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="2">...</td><td colspan="2">1–ம் எதிரிக்கு எதிரான நீதித்துறை நடுவர் எண்.1, விருதுநகர் நீதிமன்ற முதல்நிலை விசாரணை பதிவேட்டு வழக்கு எண்.6/2021, உத்தரவு நாள்: 12.03.2021.</td></tr>
<tr><td>8.</td><td>அமர்வு வழக்கில் விசாரணை தொடங்கிய நாள்</td><td colspan="2">...</td><td colspan="2">09.03.2026.</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | ... | 04.06.2026.<br><br>விசாரணை இல்லை. | | |
| 10. | 1–ம் எதிரி மீது குற்றச் சாட்டு வனையப்பட்ட நாள் | ... | 21.06.2022. | | |
| 11. | குற்றம் சாட்டப்பட்டது | ... | எதிரிகள் மீது பிரிவு 304(ii) இ.த.ச.–வின் கீழ். | | |
| 12. | குற்றம் வனையப்பட்டது | ... | 1–ம் எதிரி மீது பிரிவு 304(ii) இ.த.ச.–வின் கீழ். | | |
| 13. | காலதாமதத்திற்கான காரணம் | ... | அரசு தரப்பு சாட்சிகளின் தாமதம். | | |
| 14. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | ... | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 09.03.2026 | 09.03.2026 |
| | | | அ.சா.2 | 09.03.2026 | 09.03.2026 |
| | | | அ.சா.3 | 09.03.2026 | 09.03.2026 |
| | | | அ.சா.4 | 09.03.2026 | 09.03.2026 |
| | | | அ.சா.5 | 09.03.2026 | 09.03.2026 |
| | | | அ.சா.6 | 09.03.2026 | 09.03.2026 |
| | | | அ.சா.7 | 10.03.2026 | 10.03.2026 |
| | | | அ.சா.8 | 24.03.2026 | 24.03.2026 |
| | | | அ.சா.9 | 24.03.2026 | 24.03.2026 |
| | | | அ.சா.10 | 24.03.2026 | 24.03.2026 |
| | | | அ.சா.11 | 24.03.2026 | 24.03.2026 |
| | | | அ.சா.12 | 04.06.2026 | 04.06.2026 |
| 15. | 1–ம் எதிரியிடம் பிரிவு 313(1)(ஆ) கு.வி.மு.ச. படி விசாரணை செய்யப்பட்ட நாள் | ... | 06.06.2026. | | |
| 16. | 1–ம் எதிரி மற்றும் குற்ற முறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனுக்கள் | ... | –– | | |
| 17. | கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர் | ... | திரு. P. ராமர்பாண்டி | | |

| | | | |
|---|---|---|---|
| 18. | 1–ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் | ... | திரு. G. மாரியப்பன் |
| 19. | 1–ம் எதிரியின் கூற்று | ... | 1–ம் எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 20. | தீர்ப்புரை நாள் | ... | 11.06.2026. |
| 21. | நீதிமன்றத்தின் முடிவு | ... | முடிவாக, 1–ம் எதிரி மீதான பிரிவு 304(ii) இ.த.ச.–வின்படி குற்றவாளி இல்லை எனத் தீர்மானித்து, 1–ம் எதிரியை பிரிவு 235(1) கு.வி.மு.ச.–வின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் P.R.No.03/2026–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரும்பு கைப்பிடியுடன் கூடிய தள்ளுவண்டி சா.பொ.1–ஐ அதன் உரிமையாளர் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக் கொள்ளவும், சுமார் 50 கிராம் எடையுள்ள கரிமருந்து துகள் சா.பொ.2 மற்றும் சணல் சாக்கில் சுமார் 5 கிலோ எடையுள்ள மருந்துடன் கூடிய தீக்குச்சிகள் மற்றும் வெற்று தீப்பெட்டி சா.பொ.3 ஆகியவற்றை மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீடு அல்லது மேல் முறையீட்டுக் காலத்திற்கு பின் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பு 09.06.2026–ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு. P. ராமர்பாண்டி அவர்களும், 1–ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. G. மாரியப்பன் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் வழக்கு ஆவணங்களை ஆய்வு செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

விருதுநகர், பஜார் காவல் நிலைய காவல் ஆய்வாளர், குற்ற எண்.6/2013, பிரிவு 304(ii) இ.த.ச.–வின் கீழான வழக்கின் இறுதி அறிக்கை விருதுநகர், நீதித்துறை நடுவர் எண்.1–ல் தாக்கல் செய்து, அது P.R.C.No.6/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, விசாரணைக்காக மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், விருதுநகர் (இ) ஸ்ரீவில்லிபுத்தூரில் சமர்ப்பிக்கப்பட்டு, அமர்வு வழக்கு எண்.103/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**2.** கடந்த 03.01.2013–ம் தேதி மாலை 05.30 மணியளவில் 1–ம் எதிரி முருகேஷ் மற்றும் இறந்துபோன 2–ம் எதிரி ரவிக்குமார் ஆகியோர் மாரியப்பன் என்பவரை தள்ளுவண்டியில் கழிவு தீக்குச்சிகளை ஏற்றிக்கொண்டு கம்பெனியில் உள்ள பாய்லரில் கொட்ட கூறியதாகவும், அவ்வாறு இழுத்து சென்றபோது தீப்பெட்டி கழிவுகள் கரிமருந்து படிமங்களில் உராய்ந்து தீப்பிடித்து வெடித்ததில் சிதறிய தீப்பிழம்புகள் மாரியப்பன் உடல் முழுவதும் பட்டு தீக்காயங்களாகி உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பலனளிக்காமல் 04.01.2013–ம் தேதி இறந்துபோக காரணமாக இருந்த குற்றம் புரிந்ததாக எதிரிகள் மீது பிரிவு 304(ii) இ.த.ச.–வின் கீழ் விருதுநகர், பஜார் காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3.** இவ்வழக்கின் 2–ம் எதிரி ரவிக்குமார் என்பவர் கடந்த 02.08.2020–ம் தேதி இறந்து விட்டதாக முதல்நிலை விசாரணை பதிவேட்டு வழக்கு எண்.6/2021–ல் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டு, 2–ம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அற்று போய் விட்டதாக 02.03.2021–ம் தேதி நீதித்துறை நடுவர் எண்.1–ல் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**4.** இவ்வழக்கின் 1–ம் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும்

வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் 1–ம் எதிரிக்கு விருதுநகர், நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் இலவசமாக வழங்கப்பட்டதை உறுதி செய்து, இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, 1–ம் எதிரி மீது பிரிவு 304(ii) இ.த.ச.–வின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கிக்கூறி 1–ம் எதிரியை வினவிய போது, 1–ம் எதிரி குற்றச்சாட்டை மறுத்ததன் பேரில் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**5.** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.12 வரையான சாட்சிகள் விசாரிக்கப் பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14 வரையான சான்றாவணங்களும், சா.பொ.1 முதல் சா.பொ.3 வரையான சான்று பொருள்களும் குறியீடு செய்யப்பட்டன.

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு : –</u>**

**6.** இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 பார்வதி என்பவர் விருதுநகர் பாத்திமா நகரில் குடியிருந்து வந்துள்ளார். அ.சா.1–ன் கணவர் மாரியப்பன் விருதுநகர் – சாத்தூர் ரோட்டில் உள்ள அம்மன் தீப்பெட்டி கம்பெனியில் 8 வருடமாக வேலை பார்த்து வந்துள்ளார். மாரியப்பன் தனது மனைவியான அ.சா.1–யிடம் தான் வேலை பார்க்கும் கம்பெனி சீர்கெட்டு உள்ளதாகவும், அவ்வப்போது தீ விபத்து ஏற்படுவதாகவும் கூறியுள்ளார். அ.சா.1–ன் கணவர் 03.01.2013–ம் தேதி காலை 07.00 மணிக்கு தீப்பெட்டி கம்பெனிக்கு வேலைக்கு சென்றார். மாலை 05.30 மணியளவில் கம்பெனியில் தீப்பெட்டி குச்சியில் உள்ள கரிமருந்து துகள்கள் படிந்திருந்த சாக்கை இழுத்து தள்ளுவண்டியில் ஏற்ற முற்படும் போது திடீரென்று ஏற்பட்ட உராய்வினால் வெடிவிபத்து ஏற்பட்டு தீப்பிளம்பு கிளம்பி அ.சா.1–ன் கணவரின் முன்பகுதி முழுவதும் தீக்காயம் ஏற்பட்டுள்ளதாகவும், மதுரை, தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பப்பட்டதாகவும், மாரியப்பன் உடன் வேலை பார்க்கும் சொர்ணவேல் என்பவர் அ.சா.1–க்கு தகவல் கூறியுள்ளார்.

**7.** அ.சா.1 மதுரை, கென்னட் ஆஸ்பத்திரிக்கு சென்று, இரவு 01.00 மணியளவில் அ.சா.1–ஐ பார்த்தபோது அவர் உடல் எல்லாம் காந்துகிறது என்று துடித்துள்ளார். என்ன நடந்தது என்று அ.சா.1 கேட்க தீக்குச்சி எடை போடும் வேலை பார்த்து வந்ததாகவும், அந்த வேலை முடிந்த பின்பு கழிவு தீப்பெட்டி குச்சிகளை சாக்குப்பையில் வைத்து ஒரு தள்ளு வண்டியில் எடுத்து சென்று பாய்லரில் போட்டு எரிப்பதும், காம்பவுண்டுக்கு வெளியில் உள்ள குப்பை தொட்டியில் போடுவதும் தனது அன்றாட வேலை என்றும், கழிவுகளை எடுக்கும்போது தீப்பெட்டி கம்பெனியின் வடக்குபுற காம்பவுண்டின் மத்திய பகுதியில் மிஷினரி ஹாலுக்கு எதிர்புறமாக இடையில் உள்ள ஒரு குறுக்கு சந்து போன்ற இடத்தில் தீப்பெட்டி, தீக்குச்சி, கரிமருந்து துகள்கள் அதிகமாக படிந்திருந்ததாகவும், அதன்மேலே உள்ள தீப்பெட்டி, தீக்குச்சி சாக்கு மூட்டைகளை இழுத்தால் தீ விபத்து ஏற்படும் என்று சூப்பர்வைசர் முருகேஷ் மற்றும் ஆபிசர் ரவிக்குமார் ஆகியோர்களுக்கு நன்றாக தெரிந்திருந்தும், எவனாவது செத்து ஒழியட்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தீக்குச்சி கரிமருந்து கழிவுகளை அப்புறப்படுத்தாமல் விட்டதால் தான் தீப்பெட்டி தீக்குச்சி கழிவு மூட்டைகளை இழுத்து தள்ளு வண்டியில் ஏற்ற தூக்கியபோது சுமார் 05.30 மணியளவில் உராய்வினால் திடீரென தீப்பற்றி, வெடிவிபத்து ஏற்பட்டு, தனது உடலின் முன்பகுதி முழுவதும் தீயினால் கருகி விபத்து ஏற்பட்டதாகவும், இவ்விபத்திற்கு மேற்படி நபர்களே காரணமானவர்கள் என்றும் அ.சா.1–யிடம் கூறி வருத்தப்பட்டுள்ளார். சிகிச்சையில் இருந்த மாரியப்பன் சிகிச்சை பலனிற்றி 04.01.2013–ம் தேதி 01.14 மணியளவில் இறந்து விட்டார். சம்பவம் குறித்து எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க அ.சா.1 பஜார் காவல் நிலையத்தில் புகார் மனு அ.சா.ஆ.6 கொடுத்துள்ளார்.

**8.** அ.சா.1–னிடம் புகார் மனுவை பெற்ற விருதுநகர், பஜார் காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு. இளங்கோ என்பவர் மேற்படி புகாரின்

தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.6/2013, பிரிவுகள் 286, 304 இ.த.ச. உ/இ பிரிவு 4 of Explosive Substance Act 1908–ன்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 பதிவு செய்துள்ளார். வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 04.01.2013–ம் தேதி இரவு சுமார் 07.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.5 ராமநாதன் மற்றும் அ.சா.11 சரவணக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அ.சா.ஆ.8 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 தயார் செய்துள்ளார். சாட்சிகள் அ.சா.1 பார்வதி, அ.சா.2 ரணவேல், அ.சா.3 முத்து மகேந்திரன், அ.சா.4 தர்மராஜ், அ.சா.5 ராமநாதன், அ.சா.9 சோலையப்பன், அ.சா.10 செல்வம் மற்றும் அ.சா.11 சரவணக்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இறந்துபோன மாரியப்பன் உடலை பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்துள்ளார். இறந்துபோன மாரியப்பன் உடலை பிரேத பரிசோதனை செய்ய தலைமை காவலர் அ.சா.7 பாண்டி என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து மதுரை, கென்னட் மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளார்.

**9.** 05.01.2013–ம் தேதி 11.15 மணியளவில் எதிரிகள் முருகேஷ் மற்றும் ரவிக்குமார் ஆகியோர்களை சம்பவ இடத்தில் வைத்து கைது செய்து, எதிரி ரவிக்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா.6 நாகராஜ் மற்றும் தனசேகர் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். அதன் அடிப்படையில் சம்பவ இடத்தில் இருந்த இரும்பு கைப்பிடியுடன் கூடிய தள்ளுவண்டி சா.பொ.1, சுமார் 50 கிராம் எடையுள்ள கரிமருந்து துகள் சா.பொ.2, சணல் சாக்கில் சுமார் 5 கிலோ எடையுள்ள மருந்துடன் கூடிய தீக்குச்சிகள் மற்றும் வெற்று தீப்பெட்டி சா.பொ.3 ஆகியவற்றை அத்தாட்சி அ.சா.ஆ.10 தயார் செய்து கைப்பற்றியுள்ளார். எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

**10.** 21.02.2013-ம் தேதி பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சரவணன் என்பவரை விசாரணை செய்து பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.11 பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு சொத்துக்களை படிவம் – 91 அ.சா.ஆ.12-ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். காவலர் கருப்பசாமி என்பவர் மூலம் வழக்கு சொத்தை பகுப்பாய்விற்காக இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். காவலர் கருப்பசாமியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குநர் மஞ்சுளாதேவி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.13 பெற்றுள்ளார். இவ்வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்ட காவல் ஆய்வாளர் திரு. ராமநாராயணன் என்பவர் சாட்சிகள் சிதம்பரநாதன், ராஜ்குமார் மற்றும் முத்துலட்சுமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

**11.** இவ்வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் அ.சா.12 திருமதி. பிரியா என்பவர் சாட்சிகள் அ.சா.1 பார்வதி மற்றும் அ.சா.8 மதனகோபால் ஆகியோர்களை விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகள் மகேஸ்வரன் மற்றும் கார்த்திக்சங்கர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். காவல் ஆய்வாளர் இளங்கோ மற்றும் ராமநாராயணன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் சட்டப்பிரிவை 286, 304 இ.த.ச. உ/இ பிரிவு 4 of Explosive Substance Act 1908-ல் இருந்து 304(ii) இ.த.ச.-வின்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.14 தயார் செய்துள்ளார். இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது மேற்படி பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**12.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 1–ம் எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகளைக் குறித்து 1–ம் எதிரிக்கு விளக்கி கூறி பிரிவு 313(1)(ஆ) கு.வி.மு.ச.–வின் கீழ் வினவியபோது, 1–ம் எதிரி அவை பொய் சாட்சியம் என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார். 1–ம் எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று சொன்னதன் பேரில் 1–ம் எதிரி தரப்பு சாட்சிகள் யாரும் விசாரிக்கவில்லை.

**13.** அரசு தரப்பில் 1–ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவு 304(ii) இ.த.ச.–வின் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

**<u>தீர்வு : –</u>**

**14.** இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரிகள், தீக்குச்சி கரிமருந்து படிமங்களை அப்புறப்படுத்ததாமல் அசட்டையாக இருந்து, கரிமருந்து படிமங்கள் இடையே இரும்பு தள்ளுவண்டியில் கழிவு தீக்குச்சிகளை ஏற்றி சென்றால் தீப்பிடித்து மனித உயிருக்கு மரணம் ஏற்படும் என தெரிந்தே எதிரிகள், மாரியப்பன் என்பவரை தள்ளுவண்டியில் கழிவு தீக்குச்சிகளை ஏற்றிக்கொண்டு பாய்லரில் கொட்டச் சொன்னதால், அவ்வாறு கொட்டச் சென்றபோது தீப்பிடித்து வெடித்ததில் மாரியப்பன் என்பவருக்கு தீக்காயங்கள் ஏற்பட்டு உயிர் இழக்க காரணமாக இருந்த குற்றத்தை செய்துள்ளதாக 1–ம் எதிரி மீது அரசு தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

**15.** இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளில் அ.சா.1 புகார்தாரர். அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.9 மற்றும் அ.சா.10 ஆகியோர் சம்பவத்தை பார்த்த சாட்சிகள். அ.சா.5 மற்றும் அ.சா.11 ஆகியோர் பார்வை மகஜரில் கையொப்பமிட்ட சாட்சிகள். அ.சா.6 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையொப்பமிட்ட சாட்சி. அ.சா.7 பிரேதத்தை அடையாளம்

காட்டிய சாட்சி. அ.சா.8 சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சி. அ.சா.12 புலன் விசாரணை அதிகாரி.

**16.** கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், 1–ம் எதிரி மற்றும் இறந்துபோன 2–ம் எதிரி ஆகியோர் கரிமருந்து படிமங்களை அப்புறப் படுத்தாமல் மாரியப்பன் என்பவரது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பது தெரிந்தும், அவரை தள்ளுவண்டியில் கழிவு தீக்குச்சிகளை ஏற்றிக்கொண்டு கம்பெனியில் உள்ள பாய்லரில் கொட்டக்கூறியதால், அவ்வாறு இழுத்து சென்றபோது தீப்பெட்டி கழிவுகள் கரிமருந்து படிமங்களில் உராய்ந்து தீப்பிடித்து வெடித்ததில் அ.சா.1–ன் கணவர் மாரியப்பன் என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தினர் என்பது அரசு தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றவாணங்கள் மூலமாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, 1–ம் எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டும் என வாதிட்டார்.

**17.** கற்றறிந்த 1–ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், 1–ம் எதிரி மற்றும் இறந்துபோன 2–ம் எதிரி ஆகியோர் கரிமருந்து படிமங்களை அப்புறப் படுத்தாமல் மாரியப்பன் என்பவரது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பது தெரிந்தும், அவரை தள்ளுவண்டியில் கழிவு தீக்குச்சிகளை ஏற்றிக்கொண்டு கம்பெனியில் உள்ள பாய்லரில் கொட்டக்கூறியதால், அவ்வாறு இழுத்து சென்றபோது தீப்பெட்டி கழிவுகள் கரிமருந்து படிமங்களில் உராய்ந்து தீப்பிடித்து வெடித்ததில் அ.சா.1–ன் கணவர் மாரியப்பன் என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தினர் என்பது அரசு தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நிரூபணம் செய்ய தவறி விட்டனர் என்றும், அ.சா.1 முதல் அ.சா.6 மற்றும் அ.சா.8 வரையான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே, 1–ம் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**18.** இவ்வழக்கில் இறந்துபோன மாரியப்பன் என்பவரின் மனைவியான அ.சா.1 பார்வதி தனது சாட்சியத்தில், 03.01.2013–ம் தேதி இரவு 07.00 மணிக்கு தனது கணவர் அம்மன் தீப்பெட்டி ஆலையில் வேலை பார்த்து வரும்போது தீ விபத்து ஏற்பட்டு மதுரை, கென்னட் மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் தான் அங்கு சென்று தனது கணவரை பார்த்தபோது, அவர் பேசும் நிலையில் இல்லை என்றும், தனது கணவர் இறந்ததற்கு அம்மன் தீப்பெட்டி ஆலையில் உரிமையாளர் இழப்பீடாக ரூபாய் இரண்டு இலட்சம் கொடுத்தார் என்றும், மேற்படி தீ விபத்து யாரால் ஏற்பட்டது என்று தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அது அ.சா.ஆ.1 என்றும், புகார் மனுவில் உள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்றும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளது காணமுடிகிறது.

**19.** வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 ரணவேல் என்பவர் தனது சாட்சியத்தில், தான் அம்மன் தீப்பெட்டி ஆலையில் கணக்கு பிள்ளையாக வேலை பார்த்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், 03.01.2013–ம் தேதி மாலை 05.30 மணியளவில் டமார் என்று சத்தம் கேட்டது என்றும், அப்போது அங்கு வேலை பார்த்த மாரியப்பன் என்பவருக்கு தீக்காயம் ஏற்பட்டது என்றும், மேற்படி தீ விபத்திற்கு யார் காரணம் என்று தனக்கு தெரியாது என்றும், எவ்வாறு தீ விபத்து ஏற்பட்டது என்று தனக்கு தெரியாது என்றும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளது காணமுடிகிறது.

**20.** அ.சா.3 முத்து மகேந்திரன் என்பவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், 03.01.2013–ம் தேதி அம்மன் தீப்பெட்டி ஆலையில் வேலை பார்த்து வந்தேன் என்றும், மாலை 05.30 மணியளவில் டமார் என்று சத்தம் கேட்டது என்றும், அங்கு வேலை பார்த்த மாரியப்பனுக்கு

தீக்காயம் ஏற்பட்டது என்றும், காயம்பட்ட மாரியப்பன் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸில் அழைத்து செல்லப்பட்டார் என்றும், மறுநாள் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார் என்றும், மேற்படி தீ விபத்திற்கு யார் காரணம் என்று தனக்கு தெரியாது என்றும், போலீசார் முகவரி கேட்டார்கள், முகவரி கொடுத்தேன் என்றும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளது காணமுடிகிறது.

**21.** அ.சா.4 தர்மராஜ் என்பவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி மற்றும் இறந்துபோன மாரியப்பனை தெரியும் என்றும், 03.01.2013–ம் தேதி அம்மன் தீப்பெட்டி ஆலையில் வேலை பார்த்து வந்தேன் என்றும், மாலை 05.30 மணியளவில் டமார் என்று சத்தம் கேட்டது என்றும், அப்போது அங்கு வேலை பார்த்த மாரியப்பனுக்கு தீக்காயம் ஏற்பட்டது என்றும், காயம்பட்ட மாரியப்பன் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸில் அழைத்து செல்லப்பட்டதாக சொன்னார்கள் என்றும், காயம்பட்ட மாரியப்பன் மறுநாள் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார் என்றும், மேற்படி தீ விபத்திற்கு யார் காரணம் என்று தனக்கு தெரியாது என்றும், விபத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளது காணமுடிகிறது.

**22.** அ.சா.9 சோலையப்பன் என்பவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், 03.01.2013–ம் தேதி அம்மன் தீப்பெட்டி ஆலையில் டெக்னிசியன் வேலை பார்த்தேன் என்றும், மாலை சுமார் 05.30 மணியளவில் திடீரென்று சத்தம் கேட்டது என்றும், தான் சென்று பார்த்தபோது அந்த இடம் புகை மண்டலமாக இருந்தது என்றும், வேறு யாரும் காயம்பட்டு கிடந்தார்களா என்று தனக்கு தெரியாது என்றும், மாரியப்பன் என்பவருக்கு காயம் ஏற்பட்டதாகவும், அவரை மருத்துவமனை அழைத்து சென்றதாகவும், மறுநாள் அவர் இறந்து விட்டதாகவும் தகவல் சொன்னார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளது காணமுடிகிறது.

**23.** அ.சா.10 செல்வம் என்பவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், 03.01.2013–ம் தேதி அம்மன் தீப்பெட்டி ஆலையில் பிட்டராக வேலை பார்த்தேன் என்றும், மாலை சுமார் 05.30 மணியளவில் டமார் என்று சத்தம் கேட்டது என்றும், தான் சென்று பார்த்தபோது கூட்டமாக இருந்தது என்றும், மாரியப்பன் என்பவருக்கு காயம் ஏற்பட்டிருந்ததாகவும், விபத்திற்கு யார் காரணம் என்று தனக்கு தெரியாது என்றும், அவரை மருத்துவமனை அழைத்து சென்றனர் என்றும், மறுநாள் அவர் இறந்து விட்டதாகவும் தகவல் சொன்னார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளது காணமுடிகிறது.

**24.** வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.8 தனது சாட்சியத்தில், அ.சா.1 தனது உறவினர் என்றும், எதிரியை தனக்கு தெரியாது என்றும், தனது அத்தை மகன் மாரியப்பன் சாத்தூர் அருகே உள்ள தீப்பெட்டி தொழிற்சாலையில் வேலை பார்த்தார் என்றும், அங்கு விபத்து ஏற்பட்டு மாரியப்பன் இறந்து விட்டதாக சொன்னார்கள் என்றும், அ.சா.1 பார்வதிக்கு படிப்பறிவு இல்லாததால் அவருடன் காவல் நிலையத்திற்கு வருமாறு தன்னை அழைத்தார் என்றும், தான், அ.சா.1 உடன் விருதுநகர் பஜார் காவல் நிலையம் சென்றேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் தான் எழுதினேன் என்றும், அங்கு உள்ள போலீசார் சொல்ல சொல்ல புகார் மனு எழுதினேன் என்றும், அ.சா.1 எதுவும் சொல்லவில்லை என்றும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

**25.** இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 பார்வதி தனது சாட்சியத்தில், அம்மன் தீப்பெட்டி கம்பெனியின் நிர்வாகி மற்றும் மேஸ்திரியான 1 மற்றும் 2 எதிரிகள் மேற்படி தொழிற்சாலையில் தீப்பெட்டி கழிவுகள், தீக்குச்சி கரிமருந்துகள் அதிகமாக படிவதை உடனுக்குடன் சுத்தம் செய்து பாதுகாப்புடன் வைக்காமலும், இதுகுறித்து பலமுறை கூறி எச்சரித்தும்

கரிமருந்து கழிவுகளை அகற்றாமல், கழிவு தீக்குச்சிகளை கரிமருந்து படிமங்களிடையே கழிவு தீக்குச்சிகளை எடுத்து சென்றால் மனித உயிருக்கு மரணம் ஏற்படும் என தெரிந்தே 03.01.2013–ம் தேதி மாலை 05.30 மணியளவில் 1–ம் எதிரி மற்றும் இறந்துபோன 2–ம் எதிரியும் தனது கணவர் மாரியப்பனை தள்ளுவண்டியில் கழிவு தீக்குச்சிகளை ஏற்றி கம்பெனியில் உள்ள பாய்லரில் கொட்டக்கூறினர் என்றும், அவ்வாறு கழிவு தீக்குச்சிகளை தள்ளு வண்டியில் இழுத்து சென்றபோது, தீப்பெட்டி கழிவுகள் கரிமருந்து படிமங்களுடன் உராய்ந்து தீ பிடித்து வெடித்து சிதறி தனது கணவர் உடல் முழுவதும் பட்டு தீக்காயம் ஏற்பட்டு இறந்து விட்டார் என்றும், மேற்படி விபத்திற்கு 1–ம் எதிரி காரணம் என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக, அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

**26.** வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் மற்றும் வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.8 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளதும் காணமுடிகிறது. வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.9 மற்றும் அ.சா.10 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், 03.01.2013–ம் தேதி மாலை 05.30 மணியளவில் டமார் என்று சத்தம் கேட்டது என்றும், விபத்திற்கு யார் காரணம் என்று தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளதும் காணமுடிகிறது.

**27.** ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி தயார் செய்த போது உடன் இருந்த சாட்சியான அ.சா.6 நாகராஜ் தனது சாட்சியத்தில், ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.3 மற்றும் அத்தாட்சி அ.சா.ஆ.4–ல் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தான் கையெழுத்து போட்ட ஆவணங்களில் உள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்றும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம்

அளித்துள்ளது காணமுடிகிறது.

**28.** இவ்வழக்கின் புலன் விசாரணையை காவல் ஆய்வாளர் திரு. இளங்கோ என்பவர் செய்தது குறித்தும், வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டது குறித்து காவல் ஆய்வாளர் அ.சா.12 திருமதி. பிரியா என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பில் 1–ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு ஆதரவாக அ.சா.1 முதல் அ.சா.6 மற்றும் அ.சா.8 முதல் அ.சா.11 வரையான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் உள்ள நிலையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.12–ன் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டும் இவ்வழக்கினை முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**29.** அரசு தரப்பில் 1–ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவு 304(ii) இ.த.ச.–வின் படியான குற்றச்சாட்டு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய தவறி விட்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, சந்தேகத்தின் பலனை 1–ம் எதிரிக்கு அளித்து 1–ம் எதிரியை விடுதலை செய்வதே நீதியின்பால் உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, 1–ம் எதிரி மீதான பிரிவு 304(ii) இ.த.ச.–வின்படி குற்றவாளி இல்லை எனத் தீர்மானித்து, 1–ம் எதிரியை பிரிவு 235(1) கு.வி.மு.ச.–வின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் P.R.No.03/2026–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரும்பு கைப்பிடியுடன் கூடிய தள்ளுவண்டி சா.பொ.1–ஐ அதன் உரிமையாளர் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளவும், சுமார் 50 கிராம் எடையுள்ள கரிமருந்து துகள் சா.பொ.2 மற்றும் சணல் சாக்கில் சுமார் 5 கிலோ எடையுள்ள

மருந்துடன் கூடிய தீக்குச்சிகள் மற்றும் வெற்று தீப்பெட்டி சா.பொ.3 ஆகியவற்றை மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீடு அல்லது மேல் முறையீட்டுக் காலத்திற்கு பின் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஜூன் திங்கள் 11–ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

BALAMURUGAN Digitally signed by BALAMURUGAN
உதவி அமர்வு நீதிபதி,
விருதுநகர்.

**அரசு தரப்பு சாட்சிகள் : –**

அ.சா.1 – திருமதி. பார்வதி
அ.சா.2 – திரு. ரணவேல்
அ.சா.3 – திரு. முத்து மகேந்திரன்
அ.சா.4 – திரு. தர்மராஜ்
அ.சா.5 – திரு. ராமநாதன்
அ.சா.6 – திரு. நாகராஜ்
அ.சா.7 – திரு. பாண்டி
அ.சா.8 – திரு. மதனகோபால்
அ.சா.9 – திரு. சோலையப்பன்
அ.சா.10 – திரு. செல்வன்
அ.சா.11 – திரு. சரவணக்குமார்
அ.சா.12 – திருமதி. பிரியா (காவல் ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள் : –**

அ.சா.ஆ.1 – புகார் மனுவில் உள்ள அ.சா.1–ன் கையெழுத்து
அ.சா.ஆ.2 – பார்வை மகஜரில் உள்ள அ.சா.5–ன் கையெழுத்து
அ.சா.ஆ.3 – ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.6–ன் கையெழுத்து
அ.சா.ஆ.4 – அத்தாட்சியில் உள்ள அ.சா.6–ன் கையெழுத்து
அ.சா.ஆ.5 – பார்வை மகஜரில் உள்ள அ.சா.11–ன் கையெழுத்து
அ.சா.ஆ.6 – புகார் மனு
அ.சா.ஆ.7 – முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.8 – பார்வை மகஜர்

அ.சா.ஆ.9 – மாதிரி வரைபடம்
அ.சா.ஆ.10 – அத்தாட்சி
அ.சா.ஆ.11 – பிரேத பரிசோதனை அறிக்கை
அ.சா.ஆ.12 – படிவம் – 91
அ.சா.ஆ.13 – பகுப்பாய்வு அறிக்கை
அ.சா.ஆ.14 – சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருள்கள் : –</u>**

சா.பொ.1 – தள்ளுவண்டி
சா.பொ.2 – சுமார் 50 கிராம் எடையுள்ள கரிமருந்து துகள்
சா.பொ.3 – சணல் சாக்கில் சுமார் 5 கிலோ எடையுள்ள மருந்துடன் கூடிய தீக்குச்சிகள் மற்றும் வெற்று தீப்பெட்டி

**<u>1–ம் எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் : –</u>**

இல்லை.

BALAMURUGAN Digitally signed by BALAMURUGAN
உதவி அமர்வு நீதிபதி,
விருதுநகர்.

**<u>பிற்சேர்க்கை : –</u>**

1. வழக்கு விசாரணையின் போது 1–ம் எதிரி பிணையில் இருந்தார்.
2. இவ்வழக்கின் சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. 1–ம் எதிரி பிரிவு 235(1) கு.வி.மு.ச.–வின் கீழ் விடுதலை செய்யப்பட்டார்.
5. வழக்கு சொத்து பற்றிய உத்தரவு சொத்து பதிவேட்டில் உள்ளது.

உதவி அமர்வு நீதிமன்றம்,
விருதுநகர்.
அமர்வு வழக்கு எண்.103/2021
சீரான தீர்ப்புரை
நாள்.11.06.2026